(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## நான்காம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் - I<br>Tamil - I | Three Hours<br>Gr -13 (2023) | 72 | T | I |

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

***01)*** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) வாரலெஞ் சேரி தாரனின் தாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொரு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவினந் தோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன கண்டே

I. தலைவன் கண்டிக்கப்படுமாற்றை எடுத்துக் காட்டுக.
II. தோழி என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துக.
III. இங்கு கையாளப்பட்டுள்ள அணியின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

ஆ) தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியின் அம்மா..

I. இச் செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?
II. இங்கு தாய், தாதை என்று குறிப்பிடப்படுவோர் யாவர்?
III. இச் செய்யுளில் பரதனின் பெருமை எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

*(12 + 12 = 24 புள்ளிகள்)*

***02)*** அ) பகுதியிலுள்ள கவிதையைப படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) பாரதியார்

பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே – அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ – உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ

சந்தமிருந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே – தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல்

தாமரைக் காடிது நித்தமுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார்

புத்தம் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை – மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம் பிறக்குது நேரினிலே

முல்லை குறிஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப் பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய்

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே

I. இக் கவிதையில் பாரதியாரை பாரத நாடெனும் வாவியில் பூத்த தாமரை என்று கூறுவதன் பொருத்தப்பாட்டை விளக்குக.
II. பாரதியார் பாடல்களின் மீது கவிஞர் கொண்ட ஈடுபாடு எவ்வாறு புலப்படுகின்றது?
III. இக் கவிதையினூடாக கவிஞர் மு.நல்லதம்பியின் கவி ஆளுமைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன?
IV. மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு வண்டுகளாகி மயங்குதல் பார் - என்ற அடிகளினூடாக கவிஞர் கூற விழையும் கருத்தையும் அதன் நயத்தையும் விளக்குக.

(16 புள்ளிகள்)

**அல்லது**

ஆ) “ஒங்களைப் பார்க்க எனக்கு உண்மையிலேயே பாவமா இருக்கு. இப்படிக் கத்தினா மொதல்ல ஓங்க ஒடம்புக்கு ஆகுமா”? செட்டியாரும் தம் நிலையை எண்ணித் தாமே வருந்தினார். “என்ன செய்றது? நாம வாங்கின வரம் அப்பிடி. அந்தச் சோமசுந்தரம்பிள்ளை நடுவிலே ஏதாச்சும் செய்வாரு. அது தான் சாக்குன்னு கொஞ்சம் வாயை மூடுவேன். அவரு இல்லேன்னா நான் கத்திக் கத்தி மூச்சே போயிருக்கும். பயக நல்லா தலையெடுக்கணும் தான் பார்க்கிறேன். அவங்க தாய் தகப்பன்மாரு என்னை நம்பி ஒப்படைச்சிருக்காங்களே… என்னமோ அண்ணாச்சி, ராத்திரி ராத்திரி



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

வீட்டிலே வந்து படுத்துக்கிட்டே நானா நெனைச்சி வருத்தப்பட்டுக்கிடுவேன். ஒவ்வொரு சமயம் தொண்டை கட்டிக்கிடும். பாலிலே பனங்கல்கண்டும் மொளகும் போட்டுக் குடிப்பேன். மொதலாளின்னு ஆயிட்டோம். செய்றதைச் செய்யத்தானே வேணும்? அந்தச் சம்புகவல்லி புண்ணியத்திலே இதுவரையிலும் ஒடம்புக்கு ஒண்ணு வந்து படுத்ததில்லை. சரி சரி, எவ்வளவு காலம் தான் ஒடம்பு தாங்கும்? இனிமே ஒவ்வொண்ணையும் அப்பிடி அப்பிடிக் கொறைச்சிக்கிட்டு வர வேண்டியது தான். நமக்குப் பகவான் தொண்டையை என்ன வெண்கலத்திலையா படைச்சிருக்கான்? ஷண்முகம்பிள்ளை சிரித்துக் கொண்டே சொன்ன புத்திமதி, நியாயமானதாகவே செட்டியாருக்குப்பட்டது. ஆனாலும் அதை ஒப்புக்கொள்வது சுயநலம் என்று கருதினார். ''அண்ணாச்சி! நீங்க என்னதான் சொல்லுங்க: பயக நல்லபடியாத் தலையெடுக்கணும். இவ்வளவு காலமும் இப்பிடி இருந்திட்டு இனி என்ன எக்கேடு கெட்டா என்னண்ணு என்னாலே இருக்க முடியாது. இனிமே என்ன? வயசு அறுபதாச்சு. உசுரை வச்சிருந்து என்னத்தைச் சாதிச்சிறப் போறோம்?'' என்று தியாக உணர்ச்சியோடு பேசினார். பேச்சில் ஒரு உறுதி நிறைந்திருந்தது. ஷண்முகம் பிள்ளை அதைப் பார்த்து, ''அப்பிடின்னா, நித்தியப்படி அர்ச்சனை நடக்கும்ணு தான் சொல்லுங்க'' என்று சொல்லி விட்டு உரக்கச் சிரித்தார்.

செட்டியார் அவருடைய சிரிப்பைப் பார்த்து மிகவும் மனம் நொந்து கொண்டு, ''என்னமோ அண்ணாச்சி, ஓங்களுக்கு சிரிப்பா இருக்கு. பாருங்க, இப்போ ஓங்ககிட்டே சரியாகக் கூடப் பேச முடியல்லே, தொண்டை வலிக்குது. நான் பொறந்த வேளை!'' என்ற அழ மாட்டாத குறையாகச் சொல்லியபடி நடந்தார்.

I. கதிரேசன் செட்டியாரின் தயாளகுணம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
II. ''அவரும் இல்லைன்னா கத்திக் கத்தி மூச்சே போயிருக்கும்'' சோமசுந்தரம் பிள்ளை பற்றி செட்டியார் இவ்வாறு கூறக் காரணம் யாது?
III. ''நித்தியப்படி அர்ச்சனை நடக்கும்'' என்ற தொடர் கதாசிரியரால் பயன்படுத்தப்பட்டதன் நோக்கம் யாது?
IV. ஆசிரியர் மொழிநடை பற்றி கருத்துரைக்குக. *(16 புள்ளிகள்)*

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி II

**03)** இடனறிதல் என்ற அதிகாரத்தில்

i. பகைவரது அரணின் புறத்தே தங்குவதற்குரிய இடத்தை அறிதலின் பயன்.
ii. வினை செய்வதற்குரிய இடமறிதல்.
iii. பகைவரைச் சேரக்கூடாத இடமும், சேர்ந்த இடத்து ஏற்படும் இழுக்கும்.
என்பவை திருவள்ளுவரால் விளக்கப்படுமாற்றை எடுத்துக்காட்டுவதுடன்,
iv. இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள பிறிது மொழிதல் அணிகளை அடையாளம் காட்டி அவை ஒவ்வொன்றும் கையாளப்பட்டுள்ள நோக்கத்தைத் துலக்குக.

*(20 புள்ளிகள்)*

**04)** சுமந்திரன் சொல்லைக் கேட்ட பரதன் குகனைக் காணபுறப்பட்டதிலிருந்து, அப் பரதனைக் குகன் வணங்கிப் புகழ்வது வரையிலான பகுதியில்

i. குகனைக் காணப் பரதன் புறப்பட்ட விதம்
ii. குகன் கண்டு கலங்கிய பரதனின் தோற்றம்
iii. பரதன் வனம் வந்த நோக்கத்தை அறிந்த குகனது மனநிலை
iv. குகனால் கூறப்படுகின்ற பரதனின் பெருமைகள்
என்பவற்றை விளக்குக. *(20 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**05)** தேம்பாவணி காட்சிப்படலத்தில்

i. இயேசு பாலனைக் கண்ட இடையர்களின் மகிழ்ச்சி.

ii. இயேசு பாலனின் பெருமைகள்

iii. சாந்தியின் ஐயங்கள்

iv. வீரமாமுனிவரால் கையாளப்பட்டுள்ள உவமை அணிகள் என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**06)** பேராசிரியர் க.கைலாசபதியின் மானுடம் தழுவிய கவிஞர்கள் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. வள்ளுவர் இளங்கோ, கம்பர், பாரதி ஆகியோரை மகாகவிகள் எனக் கட்டுரையாசிரியர் எவ்வாறு நிறுவுகிறார்?

ii. மகாகவிகளை இனங்கண்டு கொள்வதற்கான அளவுகோல்களை விளக்குக.

iii. பாரதி பற்றிய ஆசிரியரின் மதிப்பீடு எவ்வாறு அமைகின்றது?

iv. கட்டுரையில் கையாளப்பட்டுள்ள மொழிநடையின் சிறப்பம்சங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

**07)** அ.ஸ.அப்துல் ஸமது அவர்களின் ''எனக்கு வயது பதின்மூன்று'' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு..

i. இஸ்லாமியப் பண்பாட்டம்சங்கள்

ii. ஏழை – பணக்கார வர்க்க முரண்பாடு

iii. ஸல்மாவின் துன்ப உணர்வுகள்

iv. ஸல்மாவின் ஆசைகளும் விருப்பங்களும்
என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**08)** பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினை விளக்குக.

i. சிலப்பதிகாரம் ஊர்காண்காதையில் கோவலனின் மனநிலை.

ii. உதய சூரியன் கவிதையில் உதயசூரியனின் வருகையால் இவ்வுலகில் ஏற்பட்ட மாற்றங்கள்.

iii. கோயில் திருப்பதிகத்தில் இறைவனது பெருமைகள்.

iv. திருப்பாணாழ்வார் திருவரங்கப் பெருமான் மீது கொண்ட பக்தி

v. மானிட சக்தி கவிதையில் மானிட சக்தியின் மகத்துவம். (20 புள்ளிகள்)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## நான்காம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 4th Term Examination - 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் - II | Three Hours | 72 | T | II |
| Tamil - II | Gr -13 (2023) | | | |

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(01) ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01) ஒன்றுக்கு மேற்பட்ட மூக்கொலிகள் இடம்பெறும் சொல்.
(01) பணம் (02) குணம் (03) பிணம் (04) மணம் (05) கணம் (............)

02)"த" கரம் வல்லினமாக ஒலிக்காத சொல்.
(01) தண்ணீர் (02) பத்து (03) சித்தம் (04) பக்தி (05) செய்தேன் (............)

03)எதிர்மறைப் பெயரெச்சமாக அமைவது.
(01) எழுதாது (02) எழுதாத (03) எழுதாதே (04) எழுதாமல் (05) எழுதாயா (............)

04)உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்.
(01) தாயை (02) தீயை (03) நாயை (04) காயை (05) மாயை (............)

05)பின்வருவனவற்றுள் வினையெச்சமாக அமையக் கூடியது.
(01) உரைத்த (02) வரும் (03) தேடி (04) பெய்யும் (05) குடிக்கும் (............)

06)மலரினது மென்மை என்பது.
(01) உறுப்புத் தற்கிழமை (02) பண்புத்தற்கிழமை (03) தொழிற்றற்கிழமை
(04) ஒன்றன் கூட்டத்தற்கிழமை (05) பலவின் கூட்டத்தற்கிழமை (............)

07)பின்வருவனவற்றுள் வினைத்தொகையாக அமைபவை.
(01) மலர்விழி, சுடர்விழி (02) மலர்விழி, கருவிழி (03) தமிழ்விழி இசைவிழி
(04) கயல்விழி, கருவிழி (05) சுடர்விழி, வேல்விழி (............)

08)பின்வருவனவற்றுள் சரியாகப் புணர்ந்த சொல்.
(01) வேலைப்பார்ப்போர் (02) நவீனக்கவிதை (03) பதிவுத்திருமணம்
(04) முக்கியச்செய்திகள் (05) புதியப்பாதை (............)

09)அமைச்சர் அவர்களே தங்கள் வரவு நல்வரவாகுக. இவ்வாக்கியத்தில் "தங்கள்" என்பது.
(01) படர்க்கைத் தற்சுட்டுப்பெயர் (02) படர்க்கைப் பன்மைப் பெயர்
(03) முன்னிலைப் பன்மைப் பெயர் (04) முன்னிலை மரியாதை ஒருமைப்பெயர்
(05) படர்க்கை மரியாதை ஒருமைப்பெயர் (............)

10)"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" - இதில் வரும் "ஆட்டுவி" என்பது.
(01) ஏவல் வினை (02) பிறவினை (03) காரணவினை
(04) நிபந்தனை வினை (05) செய்வினை (............)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11)பின்வருவனவற்றுள் "வை" துணைவினையாக வரும் வாக்கியம்.
(01) நான் இங்குதான் பணத்தை வைத்தேன்.
(02) நான் போதியளவு பணம் வைத்திருக்கிறேன்.
(03) பாதை குண்டும் குழியுமாக இருக்கிறது. காலைப் பார்த்து வைத்து நடக்க வேண்டும்.
(04) அம்மா சாப்பாட்டை மேசையில் எடுத்து வைத்தார்.
(05) அவர் மகளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்து வைத்திருக்கிறார். (............)

12)பின்வருவனவற்றுள் பெயரடையாகப் பயன்படும் சொல்.
(01) நாளுக்கு நாள் (02) நாள்தோறும் (03) நாளாந்தம்
(04) நாளாந்த (05) நாளாவட்டத்தில் (............)

13)பின்வருவனவற்றுள் நீங்கற் பொருளில் "ஆல்" உருபு வரும் தொடர்.
(01) தீயினால் சுட்ட புண் (02) கவலையால் மெலிந்தவன் (03) மரத்தால் விழுந்தவன்
(04) ஜன்னலால் வீசினான் (05) காலத்தினால் செய்த நன்றி (............)

14) "அவரது தொனியில் ஆவேசமும் முகத்தில் இயலாமையும் விரக்தியும் மாறி மாறி மின்னலடித்தன." இவ்வாக்கியத்தில் இடம்பெறும் "உம்"
(01) எண்ணும்மை (02) எச்ச உம்மை (03) முற்றும்மை
(04) எதிர்மறை உம்மை (05) இணைப்பும்மை (............)

15)பின்வருவனவற்றுள் மெல்வினை
(01) வெல்வோம் (02) பார்ப்போம் (03) உண்போம்
(04) படிப்போம் (05) இருப்போம் (............)

16)நீங்கள் பாடுங்களேன் என்பது
(01) விருப்பு ஏவல் (02) கடப்பாட்டு ஏவல் (03) எதிர்மறை ஏவல்
(04) வியங்கோள்வினை (05) குறிப்பு வினை (............)

17)நீங்காத நினைவுகள் இங்கு நீங்காத என்பது.
(01) எதிர்மறைத் தொழிற்பெயர் (02) எதிர்மறைப் பெயரெச்சம் (03) எதிர்மறை வினையெச்சம்
(04) எதிர்மறை வினைமுற்று (05) எதிர்மறை நிபந்தனை வினையெச்சம் (............)

18)பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையடிகள் மட்டும் கொண்ட தொகுதி.
(01) நினை, எழுது (02) சாப்பிடு, இரு (03) பார், சிரி
(04) வெட்டு, வீசு (05) துள்ளு, பாய் (............)

19)தோகை ஆடியது என்பதில் வந்துள்ள ஆகுபெயர்.
(01) கருவியாகுபெயர் (02) உவமையாகுபெயர் (03) சினையாகுபெயர்
(04) பொருளாகுபெயர் (05) தொழிலாகுபெயர் (............)

20)பெயரடிகளைக் கொண்ட வினைகள்
**(01)** எழுதுவேன், இருப்பான் (02) கதைத்தார், பயந்தேன் (03) போன்றது, ஒப்பான்
(04) சான்றான், மாண்டது (05) மகிழ்ந்தான், இன்புற்றான் (............)

(20 x 1 = 20 புள்ளிகள்)

**(02)**

**01) பின்வரும் பந்தியை வாசித்து 45 – 50 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக.**

தமிழ்மொழி வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவும் அடுத்ததொரு அடிப்படைச் சான்று கல்வெட்டுக் களாகும். தமிழகத்தின் தென் மாவட்டங்களிலுள்ள குகைகளில் பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்ட சிறிய கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. இவை பிராமி வரி வடிவத்தின் தெற்கத்திய முறையில் எழுதப்பட்டவையாகும். கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் தொல் எழுத்தியல் (Paleography) ஆராய்ச்சி அடிப்படையில் இவற்றின் காலத்தைக் கிறிஸ்துவுக்கு முந்திய மூன்றாம், இரண்டாம்



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

நூற்றாண்டுகள் என மதிப்பிடுகின்றனர். அடுத்த சில நூற்றாண்டுகளைச் சேர்ந்த மிகச் சில கல் வெட்டுக்கள் நீங்கலாக கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை கல்வெட்டுக்களின் வரலாற்றில் நீண்டதொரு இடைவெளி காணப்படுகிறது. கி.பி ஏழாம் நூற்றாண்டிலிருந்து தற்காலம் வரை ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் உரிய ஏராளமான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை தவிர செப்பேடுகளும், அரசினர் மற்றும் தனியார் ஆவணங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றிலெல் லாம், அவ்வக் காலத்தைச் சேர்ந்த பேச்சுமொழி வழக்குகள் மிகுந்துள்ளதை காணலாம்.

பிற்காலத்திய கல்வெட்டுக்களில் செய்யுட் பகுதிகள் காணப்படுகின்றன. இலக்கிய அடிப்படைச் சான்றுகளைப் பயன்படுத்தும் பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கைகளைப் பற்றி முன்னர் குறிப் பிட்டோம். அவற்றையும் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும். தமிழ்ச் சொற்களையும், தமிழர் பெயர்களையும், தமிழக இடப்பெயர்களையும் கொண்டுள்ள இலங்கைச் சிங்கள மொழிக் கல் வெட்டுக்களைப் போன்ற பிறமொழிக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழி வரலாற்றுக்கு அடிப்படைச் சான்றுகளாகப் பயன்படக் கூடியனவாகும். அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள் சிலவற்றில் தென்மாவட்டங்களில் உள்ளது போன்ற பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. பண்டைய நாணயங்களில் காணப்படும் எழுத்துக்களையும் இவற்றோடு சேர்த்துக் கொள்ளலாம். ***(13 புள்ளிகள்)***

**02) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

உணர்ச்சிகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கும் இலக்கியத்தில் கற்பனையும், கலையுணர்வும் கலந்து காணப்படும். கற்பனை உடையவர் தம்முடைய அனுபவத்தோடு மனித உணர்ச்சிகளைப் பெருக்கி யும் அவற்றிற்கு நயமிகு கலையழகு என்ற வண்ணத்தைப் பூசியும் கவர்ச்சியுடையதாக எடுத்து ரைக்க இயலும். அத்தகைய கலைஞர்கள் படைக்கும் இலக்கியத்தில் அறிவுக்கும் கருத்துக்கும் முத லிடம் தரப்படுவதில்லை. கவர்ச்சிக்கே முதலிடம் தரப்படுகிறது. இத்தகைய இலக்கியங்கள் மக்கள் உள்ளத்தை நெகிழ்விக்கும் ஆற்றலும் கவரும் திறனும் உடையனவாகும். அவற்றை ‘‘ஆற்றல் இலக் கியங்கள்’’ என்பர். அவை கற்பவர் மனதை மகிழ்விப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும். ஒரு சில இலக்கியங்கள் இதற்கு விதி விலக்காக மகிழ்விப்பதோடு அறிவுறுத்துவனவாகவும் அமையும். அவ்வாறு அமைகின்ற இலக்கியங்களே உலகில் அழியாப்புகழ் பெற்று விளங்குகின்றன.

நீதிநூல்களும் இலக்கியத்தின் ஒரு வகையேயாகும். ஆனால் அவை குறிப்பிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுகின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டுவதே அவற்றின் குறிக்கோளாகும். நீதி நூல்களை இயற்றும் புலவன் முதிர்ந்த அறிவும், கனிந்த அனு பவமும் உடையனவாக இருக்கிறான். தான் எடுத்துரைக்க விரும்பும் கருத்திற்கே முதலிடம் தருகி றான். எதைச் சொன்னாலும் அதைத் தெளிவாக பலரும் புரிந்து கொண்டு வாழ்க்கையில் கடைப் பிடிக்குமாறு அவன் சொல்ல நினைக்கிறான். அவன் உணர்ச்சிவசப்படாது காரணகாரிய தொடர்புப டுத்தி கருத்துக்களைக் கோவைப்படுத்துகிறான். பின்னர், படிப்பவர் மனதில் பதியுமாறு செய்வதற் காக, அவற்றிற்கு அவன் சிறிது கலைமெருகு கொடுக்கின்றான். இப்படைப்புப் பணியில் ஈடுபடும் பொழுது, அவன் கலைகளுக்குரிய உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் என்ற நான்கு பண்புக ளுள் இறுதியில் உள்ள இரண்டிலேயே கருத்தைச் செலுத்துகின்றான்.

‘‘உணர்ச்சி’’ என்பது இலக்கியத்திற்கு இன்றியமையாத ஒன்பது வகையான கலையுணர்வுகளைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். காவியப் புலவன் தன்னுடைய காப்பியத்தில் இன்பச்சுவை, அவலச்சுவை போன்றவற்றைப் பயன்படுத்ததுவதற்குக் கதைப்போக்கில் வாய்ப்புக்கள் பல கிடைக் கின்றன. அவன் அவ்வாய்ப்புக்களை நழுவ விடாமல் நன்கு பயன்படுத்திக் கொள்ளுகிறான். ஆத னால் அவனுடைய இலக்கியப் படைப்பு கலையழகு பெற்று மிளிர்கிறது. அறநூல் இயற்றும் புலவ னுக்கு அத்தகைய வாய்ப்பே கிடையாது. எனினும் தான் கூற வந்த கருத்துக்கள் கற்பவருக்குக் கவர்ச்சியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன், தன்னுடைய கருத்துக்களோடு உள்ளத்து ணர்ச்சிகளையும் இயன்றவரையில் அவன் குழைத்துத் தருகிறான். இவ்வாறு செய்யா விட்டால், அவனுடைய இலக்கியப் படைப்பு விரைவில் மக்களால் மறக்கப்பட்டு விடும்.

ஆகவே ‘‘வாழும் இலக்கியமாக’’ உள்ள திருக்குறள் போன்ற சிறந்த நீதி நூல்களில் உணர்ச்சிக்கு இடமில்லை என்று சொல்லுவது பொருந்தாது. ஏனெனில் உள்ளத்து உணர்ச்சியின் பொங்கலாக வெளிப்படுவதே கவிதை என்பது திறனாய்வாளரின் கருத்தாகும். ஆகவே ஒன்பான் சுவையுணர்ச்சிக ளுக்கு நீதி நூல்களில் இடமில்லை என்பதை விட அவற்றிற்கு நாம் சிறப்பிடம் வழங்குவதில்லை என்று கூறலாம். திருக்குறள் இதற்கு விதி விலக்காக இருக்கிறது என்பதை ஒருமுறை அந்நூல் முழுவதையும் படித்தால் நாம் எளிதில் உணரலாம். வள்ளுவர் வீரச்சுவையையும் அவலச்சுவையை யும், இன்பச் சுவையையும் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(01) "ஆற்றல் இலக்கியங்கள்" எத்தகைய இயல்பின?

(02) கலைக்குரிய நான்கு பண்புகளுள் எவ்வெவற்றில் நீதிநூலின் ஆசிரியர் கருத்து செலுத்துகின்றான்?

(03) திருக்குறள் விதிவிலக்கான இலக்கியம் என்று எந்த அடிப்படையில் கூறப்படுகிறது?

(04) உலகில் பொன்றாப் புகழ்பெற்று விளங்குகின்ற இலக்கியங்கள்" எனற தொடருக்கு நிகராக திருக்குறளுக்கு வழங்கப்பட்டுள்ள அடைமொழி யாது?

(05) நீதி நூல்களின் குறிக்கோள் யாது?

(06) அறநூல் புலவனிலிருந்து காவியப்புலவன் எவ்வாறு வேறுபடுகின்றான்?

(6 x 2 = 12 புள்ளிகள்)

**03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

(01) இலங்கையும் மும்மொழிச் சமூகமும்

(02) மனித வாழ்வில் சமயத்தின் வகிபாகம்

(03) இலக்கியமும் பண்பாடும்

(04) ஊடக சுதந்திரம்

(05) அறிவுடையார் எல்லாம் உடையார்

(25 புள்ளிகள்)

**04)** (01) சங்ககாலத்தில் தோன்றிய ஆற்றுப்படை இலக்கியங்களைக் குறிப்பிடுக.

(02) அவற்றின் பண்புகளை விளக்குக.

(03) சங்க காலத்தில் அரச துதி பாடும் மரபு பேணப்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

**05)** (01) பல்லவர் காலத்தின் தோன்றிய பக்திசாரா இலக்கியங்களைக் குறிப்பிடுக.

(02) பல்லவர்கால பக்திசாரா இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

(03) பல்லவர்காலப் பக்தி இலக்கியங்கள் சோழப்பெரு மன்னர் காலத்துக் காவியங்களில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன? (15 புள்ளிகள்)

**06)** (01) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

(02) அவற்றின் பண்புகளை விளக்குக.

(03) இக்காலத்தில் கத்தோலிக்க மதக் கருத்துக்களை பரப்புவதற்கு தமிழ் இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன ஆராய்க. (15 புள்ளிகள்)

**07)** ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்

(01) நூற்பதிப்புத் துறை (02) பத்திரிகைத் துறை (03) அகராதித் துறை

ஆகியவற்றிற்கு இலங்கையர் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

**08)**

அ) (01) பின்வரும் வாக்கியத்தில் உள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.

பத்தாயிரம் ரூபா பெறுமதியான வீட்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்தேன்.

(02) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

தரப்பட்டுள்ள வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

(03) நேற்று நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய அமைச்சர் - மாணவர்களின் நலன் குறித்துச் சேவையாற்றுதல் சிறந்தது என்று கூறினார். இங்கு இடம்பெறும் தலைமைத் தொடர் மற்றும் சார்புத் தொடர்களைக் குறிப்பிடுக.

(04) "எழு" என்ற வினையடியாகப் பிறந்த வினைமுற்று, வினையாலணையும் பெயர், ஆக்கப்பெயர் என்பன வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(05) நட படி முறி, கரை என்பவற்றுள் பொது வினைகள் எவை? (10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

(01) அளபெடை (02) ஆறாம் வேற்றுமை (03) இடைநிலை வகைகள்

(05 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page